

பாமாலை 389 தூதாக்கள் விண்ணில் பாடிய

1 தூதாக்கள் விண்ணில் பாடிய
தயாபரருக்கே
துதி செலுத்து , சகல
நரரின் கூட்டமே.

2 மா செயல்களைச் செய்கிற
பராபரனைப் போல்
ஆர்? என்றவரை உத்தம
கருத்தாய்ப் போற்றுங்கள்

3 இந்நாள் வரைக்கும் நமக்கு
சுகம் அருளினார்;
நீங்கா இக்கட்டைத் தமது
கரத்தால் நீக்கினார்

4 நாம் செய்திருக்கும் பாவத்தை
பாராதிருக்கிறார்;
தெய்வீக ஆக்கினைகளை
அன்பாய் அகற்றினார்

5 இனியும் நாம் மகிழ்ச்சியாய்
இருக்க சகல
தீங்கையும் அவர் தயவாய்
விலக்கியருள

6 புவியில் சமாதானத்தை
அவர் தந்தென்றைக்கும்
அன்பாய் நாம் செய்யும் வேலையை
ஆசீர்வதிக்கவும்

7 நாம் சாகுமட்டுக்கும்
நாம் தாங்கும் கோட்டையும்
நாம் சாகும்போது நம்முட
கதியுமாகவும்

8 பிரிந்து போகும் ஆவியை
மோட்சானந்தத்திலே
அவர் சேர்த்ததைத் தம்மண்டை
மகிழ்ச்சியாக்கவே